A++ NAAC

# வேல்ஸ்


அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம் (விஸ்டாஸ்)
(Deemed to be University Estd. u/s 3 of the UGC Act, 1956)
பல்லாவரம், தாழம்பூர், பெரியபாளையம், திருவள்ளூர் - சென்னை


GRADED AS CATEGORY 1 INSTITUTION BY UGC

முத்தமிழ் விழாச் சிறப்பிதழ்

# வேல்சு சிறகு

உள்ளத்து அனையது உயர்வு




வேல்சு சிறகு குடும்பத் திருநாள் சிறப்பிதழை
வேல்ஸ் வேந்தர் 'கல்வித் திருமகன்' டாக்டர் ஐசரி கே. கணேஷ் அவர்கள்
வெளியிட இணைவேந்தர்கள் டாக்டர் ஆர்த்தி கணேஷ், பேராசிரியர் ஏ. ஜோதி முருகன்,
வேல்ஸ் குழுமத் துணைத் தலைவர் டாக்டர் பிரீத்தா கணேஷ்,
உடன் இணைவேந்தர் பேராசிரியர் எம். பாஸ்கரன், தமிழ்த் துறைத் தலைவர்
பேரா.வெ.சிவசங்கர், இதழ் பொறுப்பாசிரியர் முனைவர் தே.தேன்மொழி ஆகியோர்.


சிறகு 10 இறகு 17
07 அக்டோபர் 2025
பருவ முறை பறப்பு

வெளியீடு
தமிழ்த்துறை, மொழிகள் புலம்,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப
உயர் ஆராய்ச்சி நிறுவனம்



# Vision and Mission


**Dr. Ishari K. Ganesh**
M.Com., M.B.A., M.L., Ph.D.,
**Chancellor**
VELS University
**Founder - Chairman**
VELS Group of Institution


## OUR VISION

Vels University strives to be a beacon of excellence in higher education by effectively providing its students with high standards of education and rigorous training with ample scope for the all-round development of the personality of the students and to promote positive change and social justice for the betterment of society.

## OUR MISSION

Vels University endeavours to provide relevant academic programs of theory & practical-oriented knowledge in order to empower the students to achieve professional and personal success in today's competitive, diverse and dynamic society by providing excellent research-support facilities, coaching by experienced faculty, excellent infrastructure, and collaborative research; fostering a culture of assessment, accountability, academic integrity and life-long learning.

## QUALITY ASSURANCE

Vels University has established a system of Quality Assurance to Samsung Quad Cameraality of education. Quality Advisory amittee and goanternal Asality Assurance Cell are constantly working Shot with my Galaxy towards this goal.


வேல்ஸ்
(Deemed to be University Estd. u/s 3 of the UGC Act, 1956)



டாக்டர் ஐசரி கே. கணேஷ்
நிறுவனர் - வேந்தர்




## உள்ளத்து அனையது உயர்வு!

என்ற சிந்தனையை மையமாகக் கொண்டு வெளிவந்துள்ள வேல்சு சிறகு மாணவர் இதழ், இன்றைய கல்விச் சூழலில் மிகவும் பொருத்தமான மற்றும் பாராட்டத்தக்க முயற்சியாகத் திகழ்கிறது. முதன்மையாக, இவ்விதழின் கருத்து அமைப்பு மிகவும் வலுவானது. கல்வி என்பது மதிப்பெண்களுக்கு மட்டும் அல்ல, வாழ்க்கைத் திறன்களை வளர்க்கும் ஒரு பரந்த செயல்முறை என்பதை தெளிவாக எடுத்துரைக்கிறது. இன்றைய உலகில் மாணவர்கள் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை உணர்த்தி, அதற்கான திறன் மேம்பாட்டின் அவசியத்தை விளக்குகிறது. இது, மாணவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. மாணவர்கள் தங்கள் சிந்தனைகள், கற்பனை மற்றும் திறமைகளை கட்டுரைகள், கவிதைகள், கலைப்பணிகள் போன்ற வடிவங்களில் உள்ளார்ந்த திறன்கள் வெளிப்பட்டு, தன்னம்பிக்கை வெளிப்படுத்தும் வாய்ப்பை இது வழங்குகிறது.

வேல்சு சிறகு இதழ், "கற்றல் திறன் படைப்பு" என்ற மூன்று பரிமாணங்களையும் இணைத்து, மாணவர்களின் எதிர்காலத்தை உருவாக்கும் அரிய முயற்சியாக திகழ்கிறது. இத்தகு உயரிய சாதனைகளின் சுமையை நெஞ்சில் தாங்கிய வேல்ஸ் பல்கலைக்கழக மாணவர்கள், ஒருமித்த ஒற்றுமையுடன் தங்களின் பல்துறைத் திறனையும் ஆற்றலையும் உலகறியப் பதியச் செய்யும் நோக்கில் 'வேல்சு சிறகு' என்னும் அறுதிங்கள் இதழை தொடர்ந்து வெளியிட்டு வருவது பெரிதும் பாராட்டத்தக்கதொரு சிறப்பாகும். இம்முயற்சி, மாணவர்களின் அறிவுத் திறன் மட்டுமன்று, அவர்களின் சிந்தனை விரிவையும் செயல்முக ஆற்றலையும் வெளிப்படுத்தும் அரிய மேடையாக விளங்குகிறது.

வேல்ஸ் மாணவச் செல்வங்களின் படைப்பாற்றல் பொக்கிஷங்களையும், கலைநய வளங்களையும், ஆளுமைத்திறன் மெருகூட்டங்களையும் உணர்ந்து, அவற்றை உலகின் முன்னிலையில் காட்சிப்படுத்தும் அரங்கேற்றத் தளமாக 'வேல்சு சிறகு' இதழை வடிவமைத்து, வண்ணமும் வனப்பும் குன்றாத இலக்கிய மலராக வெளியிட்டு வருவது நம் தமிழ்த் துறையின் பெருமைக்குரிய பங்களிப்பாகும். இத்தகைய சிறப்பான பணியை அர்ப்பணிப்புடனும் அக்கறையுடனும் மேற்கொண்டு வரும் நம் தமிழ்த் துறைப் பேராசிரியர்கள் அனைவருக்கும் என் உளம் கனிந்த பாராட்டுகளும் இனிய நல்வாழ்த்துகளும் உரித்தாகுக!

பெருமிதத்திற்குரிய முப்பது ஆண்டுகளைக் கடந்த வெற்றிப் பயணத்தில் திகழும் வேல்ஸ் கல்விக் குழுமமும், பதினைந்து ஆண்டுகளைக் கடந்த சாதனைப் பயணத்தில் உயர்வுடன் விளங்கும் வேல்ஸ் பல்கலைக்கழகமும், கல்வி உலகில் தனித்துவமான தடம் பதித்து வருகின்றன. உயர் கல்வியின் பல்துறைப் பரப்புகளையும் ஒருங்கிணைத்து, முன்மாதிரிப் பல்கலைக்கழகம் எனும் பெருமையைப் பெற்றிருப்பது இந்நிறுவனத்தின் உயரிய அடையாளமாகும். நிறுவனத்தின் அனைத்துநிலைகளிலும் ஒருங்கிணைந்த வளர்ச்சி முழுமைபெற்றுள்ள இந்நேரத்தில், தேசியத் தர மதிப்பீட்டில் சூஹஹஊ அங்கீகாரத்தில் 'ஹ+' என்ற உயரிய நிலையை எய்தியிருப்பது, வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் கல்விச் சிறப்பை உலகிற்கு எடுத்துக்காட்டும் மைல்கல்லாகத் திகழ்கிறது. இவ்வெற்றி, பல்கலைக்கழகத்தின் மணி மகுடத்தில் ஒளிரும் புதுமையான வைரமாகக் கருதத்தக்கது. வேல்ஸ் கல்விக் குழுமத்தின் தொடர்ச்சியான முன்னேற்றங்களும் புதுப்புது சாதனைகளும், ஒவ்வொரு கட்டத்திலும் இனிய நினைவுகளாக மனதில் பதிகின்றன. இவ்வெற்றிகளின் பின்னணியில் செயல்பட்டுள்ள ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்கள் ஆகியோரின் வசைநடநளள உழைப்பும் அர்ப்பணிப்பும் இங்கு மனமாரப் பாராட்டப்படுகின்றன.

இவ்வேளையில், 10.04.2026 அன்று நடைபெறவுள்ள வேல்ஸ் தமிழ்த் துறையின் முத்தமிழ் விழாவை முன்னிட்டு, 'வேல்சு சிறகு' இதழ் "முத்தமிழ் விழா சிறப்பிதழாக" வெளிவருவது சிறப்பிற்குரியது. வேல்சு சிறகு' தனது பெயருக்கு ஏற்றவாறு அறிவும் ஆற்றலும் கூடி, விண்ணையும் கடந்துயரும் உயரங்களை எட்டிப் புகழ் வானில் நிலைத்திட வாழ்த்துகின்றோம். இவ்விதழ் மேலும் பல சிந்தனைகளைத் தூண்டி, படைப்பாற்றலை வளர்க்கும் கருவியாக விளங்கட்டும். அனைத்திலும் வளர்ச்சி பெற்று வளம் தழைக்க, அனைவருக்கும் இதயம் கனிந்த வாழ்த்துகள்!

(ஐசரி கே.கணேஷ்)

முத்தமிழ் விழாச் சிறப்பிதழ்

# வேல்சு சிறகு

உள்ளத்து அனையது உயர்வு


## மாணவ இதழ்

புரவலர்
கல்வித் திருமகன் கலைமாமணி
முனைவர் **ஐசரி கே.கணேஷ்**
நிறுவனர் - வேந்தர்

காப்பாளர்
பேராசிரியர் முனைவர் **ஆ. ஜோதி முருகன்**
இணைவேந்தர்

**மாணவப் பதிப்பாசிரியர் குழு**

**சு. இசக்கியம்மாள்.** III உயிரி தொழில்நுட்பவியல்
**ஜே.பெரோஸ் ஷெரீம்.** III சட்டத்துறை | சந்தோஷ் III வான்பரப்பியல் | **வ.கனிமொழி** III இளம் பொறியியல் உயிர் தொழில் நுட்பவியல் | **வி.திவ்யதர்ஷினி** III உயிரி தொழில் நுட்பவியல் துறை | **பா.அபுபக்கர் சித்திக்** III தளவாடங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை | **ம.மரிய ஏசுதாஸ்** III இளம் பொறியியல் பெட்ரோலியம் | **வி.திவ்யா** II பொருளியியல் | **ம.தேவிபிரியா** II காட்சித் தொடர்பியல் | **ச.இன்பத்தமிழன்** II உயிர் வேதியியல் | **வி.விஷ்வா** III கணினிப் பயன்பாட்டியல் | **எம்.கஜேந்திரவர்மன்** II கணினி அறிவியல் | **சி.சிந்து** II தகவல் தொழில்நுட்பவியல் துறை | **த.சிந்தியா ஹெலன் மேரி** II நுண் கணினியியல் | **இ.ஸ்ரீநந்தினி** II உயிரி தொழில்நுட்பவியல் | **சா.தமிழ்ச்செல்வன்** II நுண் உயிரியியல் | **சு.கீதாஞ்சலி** II கணினி பயன்பாட்டியியல் | **பி.பிரபாவதி** I வணிகவியல் | **இரா.சுர்ஜித்** I வேதியியல் | **ச.ஸ்ரீகமலேஷ்** I வணிகவியல் | **கந்தசுப்ரமணியன்** I வணிக மேலாண்மையியல் | **லோகேஷ்** I சட்டத்துறை | **ச.பிரித்தி** I நுண் உயிரியல்

பொறுப்பாசிரியர்
முனைவர் **தே.தேன்மொழி**
உதவிப் பேராசிரியர்

பதிப்புச் செயன்மையர்
பேராசிரியர் முனைவர் **வெ. சிவசங்கர்**
தமிழ்த்துறைத் தலைவர்

பதிப்பு நெறிமையர்
பேராசிரியர் முனைவர் **பெ. மோகன்**

பதிப்பு ஆற்றுப்படுத்துநர்
பேராசிரியர் முனைவர் **க.கமலா**
முனைவர் **சி. கமலக்கண்ணன்**
உதவிப்பேராசிரியர்
முனைவர் **ம. பிரபாகரன்**
உதவிப்பேராசிரியர்

முனைவர் **ரா.ராஜா**. முனைவர் **பொ.குபேந்திரன்**
முனைவர் **செ.மார்கண்டன்** இணைப்பேராசிரியர்.
பேராசிரியர் முனைவர் **இரா.பன்னிருகைவடிவேலன்**. முனைவர் **ம.பிரகாஷ்**.
முனைவர் **அ.இருதயராஜ்**. முனைவர் **கி.துர்காதேவி**.
முனைவர் **நா.தீபாராணி**. முனைவர் **ச.பிரியா**. முனைவர் **சு.சாந்தி**
முனைவர் **யு.துர்காதேவி**.
உதவிப்பேராசிரியர்கள், தமிழ்த்துறை

வெளியீடு:
தமிழ்த்துறை - மொழிகள் புலம்
**வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்.**
பல்லாவரம், சென்னை - 600 117
(தனிச் சுற்றுக்கு மட்டும்)



வேல்ஸ் பல்கலைக்கழகம்

# வேல்சு சிறகு

சிறகு : 11
இறகு : 18

உள்ளத்து அனையது உயர்வு
10 ஏப்ரல் 2026

இதழ் பேசுகிறது...
மாணவ இதழ்


"கற்றது கைமண் அளவு; கல்லாதது உலகளவு." ( அவ்வையார்)

இக்கூற்று மாணவர்களுக்கு உந்துதலாக இருந்து, அறிவையும் திறனையும் ஒருங்கிணைத்து உயர்ந்த இலக்குகளை நோக்கிச் செல்ல வழிகாட்டுகின்றன.

வேல்சு சிறகு என்பது வெறும் இதழல்ல; இது மாணவர்களின் கனவுகளுக்கு சிறகூட்டும் ஒரு படைப்புத்தளம். இவ்விதழில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள், கவிதைகள், சிந்தனைத் துணுக்குகள் மற்றும் கலைப் படைப்புகள் அனைத்தும் மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றலை வெளிக்கொணரும் சான்றுகளாக திகழ்கின்றன. இளம் மனங்களின் கற்பனை, ஆர்வம், முயற்சி ஆகியவை இப்பக்கங்களில் உயிர்ப்புடன் வெளிப்படுகின்றன.

இவ்விதழின் முக்கிய நோக்கம், மாணவர்களின் பன்முக ஆளுமையை வளர்த்தல் ஆகும். வேல்சு சிறகு ஒரு சாதாரண இதழாக அல்லாமல், மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கான சிந்தனை மேடையாக உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இதழின் ஒவ்வொரு பக்கமும் ஒரு புதிய குரலைக் கொண்டுள்ளது; ஒவ்வொரு படைப்பும் ஒரு புதிய பார்வையை வழங்குகிறது. இளம் மனங்களின் கற்பனை, சிந்தனை, உணர்வு, சமூகப் பொறுப்பு ஆகியவை இவ்விதழின் உள்ளடக்கங்களில் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. கட்டுரைகள் அறிவை வளர்க்கின்றன; கவிதைகள் உணர்வுகளைத் தொடுகின்றன; கலைப் படைப்புகள் அழகுணர்வைத் தூண்டுகின்றன. இவ்வாறு, வேல்சு சிறகு அறிவு, உணர்வு, படைப்பு ஆகிய மூன்று பரிமாணங்களையும் ஒருங்கிணைக்கும் தனித்துவமான படைப்பாக விளங்குகிறது.

இளம் தலைமுறையை சுயமாக சிந்திக்கும் ஆளுமைகளாக மாற்றும் திறன் இவ்விதழுக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. இந்த ஒற்றுமையான முயற்சி, கல்வி என்பது ஒருவரின் சாதனையல்ல, சமூகத்தின் கூட்டு உருவாக்கம் என்பதை நினைவூட்டுகிறது. இன்னும் பல புதிய சிந்தனைகள், புதுமையான படைப்புகள், உயர்ந்த இலக்குகள் ஆகியவற்றை நோக்கி வேல்சு சிறகு தொடர்ந்து பறக்கட்டும். இது மாணவர்களின் கனவுகளுக்கு சிறகாக மட்டுமல்ல, அவர்களின் எதிர்காலத்திற்கு வழிகாட்டும் ஒளியாகவும் விளங்கட்டும்.

வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனத்தை தென்னிந்தியாவின் முன்னணி கல்வி நிறுவனங்களின் வரிசையில் உயர்த்திய பெருமை நம் வேந்தருக்கே உரியது. அவரது தொலைநோக்கு பார்வையும் கல்வி மேம்பாட்டிற்கான அர்ப்பணிப்பும், இந்நிறுவனத்தை ஒரு சாதாரண கல்வி மையமாக அல்லாமல், மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கான சிறப்பான கல்வி வளாகமாக மாற்றியுள்ளது.

அந்த வகையில், VISTAS (Vels Institute of Science, Technology & Advanced Studies) ஒரு பரந்த மற்றும் பல்துறை கலாச்சாரச் சூழலை முன்வைக்கிறது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், உலகின் பல பாகங்களிலிருந்தும் வரும் மாணவர்கள் இங்கு ஒன்றிணைந்து கற்றுக்கொள்வதன் மூலம், அறிவு மட்டுமல்லாது பரஸ்பரப் புரிதல், சகிப்புத் தன்மை, சமூக ஒற்றுமை ஆகியவற்றையும் வளர்த்துக் கொள்கின்றனர்.

மேலும், வேல்ஸ் கல்வி முறைகள் உலகளாவிய தொழில்துறை தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. நவீன தொழில்நுட்ப அறிவு, புதுமை சிந்தனை, பிரச்சினை தீர்க்கும் திறன் மற்றும் தொழில்முனைவு மனப்பாங்கு ஆகியவற்றை மாணவர்களிடம் உருவாக்கும் வகையில் பாடத்திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், மாணவர்கள் உலகளாவிய வேலைவாய்ப்புகளுக்கு தகுதியானவர்களாக உருவாகின்றனர்.

சுற்றுச்சூழல் பொறுப்புணர்வை முன்னிறுத்தும் வகையில், பசுமை வளாகம் (Green Campus) என்ற கருத்தை செயல்படுத்தி, இயற்கை நட்பு சூழலில் கற்றல் அனுபவத்தை வழங்குகிறது. மரங்கள் நிறைந்த வளாகம், சுத்தமான காற்று, அமைதியான கற்றல் சூழல் ஆகியவை மாணவர்களின் உடல் மற்றும் மன நலன்,கல்வி அனுபவத்தை மேம்படுத்துகின்றன.

வேல்ஸ் நிறுவனம் கல்வி, கலாச்சாரம், தொழில்நுட்பம் மற்றும் மனிதநேய மதிப்புகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, மாணவர்களை உலகளாவிய திறனாளிகளாக உருவாக்கும் ஒரு முன்னோடி கல்விக் கோட்டையாக விளங்குகிறது.

மனிதநேயமும் கல்விசார் தொலைநோக்கும் இணைந்த உயர்ந்த பண்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள டாக்டர் ஐசரி கே கணேஷ் அவர்கள், வேல்ஸ் கல்வி நிறுவனத்தின் வளர்ச்சியை மட்டுமல்லாது, சமூகத்தின் பல தளங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தி வரும் அரிய தலைவராகத் திகழ்கிறார்.

திரைத்துறையில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட கலைஞர்களுக்கு நேரடியாக வங்கிக் கணக்கில் நிதியுதவி வழங்கி, ஆயிரக்கணக்கான குடும்பங்களின் துயரைத் துடைத்து வருவது, அவரின் ஆழமான சமூகப் பொறுப்புணர்வின் வெளிப்பாடாகும். மனிதநேயத்தை மையமாகக் கொண்ட இத்தகைய செயற்பாடுகள், அவரை ஒரு கல்வியாளர் மட்டுமல்ல, உண்மையான சமூகச் சிந்தனையாளராகவும் உயர்த்துகின்றன.

அத்துடன், "கட்டணமில்லா கல்வி" எனும் உயரிய திட்டத்தை அறிமுகப்படுத்தி, பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கு கல்வி வாய்ப்பை வழங்கியுள்ளார். குறிப்பாக, பல்லாவரம் பகுதியில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்வி கற்றுத் தந்தையை இழந்த ஏழு மாணவர்களுக்கு முழுமையான இலவசக் கல்வியை வழங்கியிருப்பது, கல்வியின் மூலம் வாழ்க்கையை மாற்றும் அவரது உறுதியை வெளிப்படுத்துகிறது.

பெண்கள் முன்னேற்றத்திற்கும் அவர் வழங்கும் முக்கியத்துவம் சிறப்புக்குரியது. ஆண்டுதோறும் சமூகத்தில் சாதனை புரியும் பெண்களை கௌரவிக்கும் "வேல்ஸ் மகளிர் சாதனையாளர் விருது" வழங்கப்படுவதோடு, இளம் பெண் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் "Seed Money" திட்டத்தின் மூலம் ரூ. 2 லட்சம் நிதி உதவி வழங்கப்படுவது, சமத்துவமான சமூகத்தை உருவாக்கும் அவரின் பார்வையை வெளிப்படுத்துகிறது.

இத்தகைய உயரிய எண்ணங்களின் தொடர்ச்சியாக, மாணவர்களின் படைப்பாற்றலை வெளிக்கொணரும் நோக்கில் "வேல்சு சிறகு" என்ற மாணவர் இதழ் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்விதழ், மாணவப் படைப்பாளர்களுக்கு ஒரு மேடையாக அமைந்து, அவர்களின் சிந்தனை, கற்பனை, திறமைகளை உலகறியச் செய்கிறது.

இவ்விதழ் வெளிவருவதற்கு பெரும் பங்காற்றிய மேனாள் மொழிகள் புல முதல்வர் பேராசிரியர் ப. மகாலிங்கம் அவர்களுக்கும், பல்கலைக்கழக நிகழ்ச்சிகளுக்கான புகைப்படங்களை வழங்கிய திரு. ஜோ. ஆண்டனி, திரு. பிரகதீஷ், செல்வன் விஜய் ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இவ்விதழில் தங்கள் படைப்புகளை அளித்து "சிறகை விரித்துப் பறக்கத் துணிந்த" மாணவச் செல்வங்களுக்கும், அவர்களை ஊக்குவித்த பேராசிரியர்களுக்கும் என் நெஞ்சார்ந்த பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் வெ. சிவசங்கர் மற்றும் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்,, பிற துறை ஆசிரியர்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் என் இதயம் கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

"சிறகுகள் தரப்படுவதில்லை; உருவாக்கப்படுகின்றன" அந்த உருவாக்கப் பயணத்தின் ஓர் அழகிய சின்னமாகவே வேல்சு சிறகு திகழ்கிறது.

**முனைவர் தே.தேன்மொழி**
பொறுப்பாசிரியர் - வேல்சு சிறகு





# வேல்ஸ் பல்கலைக்கழக வாழ்த்துப் பாடல்

பேராசிரியர் முனைவர் **ப.மகாலிங்கம்**
மேனாள் புல முதல்வர், மொழிகள் புலம்
வேல்சு சிறகு பதிப்பு ஆலோசகர்
வேல்ஸ் பல்கலைக்கழகம்

ஆர்த்திடும் அலைகடல் ஞானத் திருக்கோயில் வாழிய வாழியவே!
கீர்த்திமிகு நம் வேல்ஸ் பல்கலைக்கழகம் வாழிய வாழியவே!

ஆயிரம் ஆயிரம் பல்திசை மாணவர் நாடி
ஆளுமை பெற்றிடும் சங்கமச் சமுத்திரம்!
பாயிரப் புகழ் மைந்தர் கணேச வள்ளல்தம்
தந்தை வேலனார் நினைவில் நிமிர்ந்த கல்வி இமயம்! வாழிய வாழியவே!

பன்னோக்கில் மின்னேர் பொறியியல் மருத்துவம் சட்டம் வணிகம்
அறிவியல் ஆய்வு எனவளர்
கல்வி நூறெனஅணிசெயப் புதுமைக் கனிந்திடும் வேல்ஸ் பல்கலைக்கழகம்!
பன்னாடும் பாரதமும் தமிழ்நாடும் இருபால் மாணவத்தால்
இணைந்து நிற்க மண்ணில் தெரியுது வேல்ஸ் வானம்! வாழிய வாழியவே!

சமநீதி சமூகநீதி மனிதம் போற்றும் மூச்சுக் காற்றால்
சாதனை படைக்கும் நம்பிக்கைப் பூஞ்சோலை! வாழிய வாழியவே!

அன்னை வேல்ஸ் வளர்த்த மாணவச் செல்வங்கள்
சமுதாய வானமெங்கும் மின்னும் நட்சத்திரங்கள்!
மேன்மை விளைத்திடும் வேல்ஸ் எனும் பல்கலைக் குடும்பம்
கால்கொண்டதுவோ சென்னைப் பல்லாவரத்தில்!
புத்தெழில் தாழம்பூரில் மணம் பரப்பிப் புது உதயத் தெலுங்கானாவில் படர்ந்தோங்கி,
நானிலம் போற்றிட இந்தியமாக வளரக் காண்போம்! வளரக் காண்போம்!

நித்தமும் புதிதாய்ப் பிறந்திடும்
நித்தமும் புதிதாய் வளர்ந்திடும்
வித்தக மாணவர் அறிவு எழுச்சியின்

ஒப்பிலா வேல்ஸ் கலைக்கூடம்!
ஒப்பிலா வேல்ஸ் கலைக்கூடம்!
ஒப்பிலா வேல்ஸ் கலைக்கூடம்!



# பணி வாழ்க்கைத் தரம்



**க.கலைச்செல்வி**
இணைப் பேராசிரியர்
வணிகவியல்

**முன்னுரை**

நம் அனைவரின் வாழ்விலும் வேலை ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. நமது வருமானம், வீட்டில் மின்சாரம் தொடர்ந்து கிடைப்பதையும், குடும்பத்திற்கு உணவு கிடைப்பதையும், எதிர்காலத் தேவைகளுக்கான சேமிப்புப் பெட்டி நிரம்பியிருப்பதையும் உறுதி செய்கிறது. அதிகரித்து வரும் செலவுகள் மற்றும் வரவு செலவுத் திட்டங்கள் அனைவரின் மனதிலும் ஓங்கி ஒடிக்கொண்டிருக்கும் இந்தச் சூழலில், வாழ்க்கையை நடத்துவதற்குப் போதுமான அளவு சம்பாதிப்பதன் முக்கியத்துவத்தை யாரும் குறைத்து மதிப்பிடுவதில்லை... ஆனால் அது, வேலைக்கும் வாழ்க்கைக்கும் இடையே சமநிலையை அடைவதை இன்னும் சற்றுக் கடினமாக்குகிறது, அவ்வளவுதான்!

பணி வாழ்க்கைத் தரம் என்பது, ஊழியர்கள் பணிபுரியும் ஒட்டுமொத்த சூழல், தங்கள் வேலையைப் பற்றிய அவர்களின் கண்ணோட்டங்கள், மற்றும் பணி-வாழ்க்கைச் சமநிலையில் அவர்கள் அடையும் திருப்தியின் அளவு ஆகியவற்றைக் குறிக்கிறது. இதில் வேலைத் திருப்தி, பணிச்சூழல்கள், சக ஊழியர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுடனான உறவுகள், மற்றும் ஊழியர்களால் பேணக்கூடிய பணி-வாழ்க்கைச் சமநிலை போன்ற காரணிகள் அடங்கும்.




வேலை-வாழ்க்கை தரம் (Quality of Work Life - QWL) என்பது பணியாளர்களின் உடல், மன ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சியை உறுதி செய்து, உற்பத்தித்திறனை அதிகரிக்கும் ஒரு முக்கிய அம்சமாகும். இது மன அழுத்தத்தைக் குறைத்து, பணியில் திருப்தியை ஏற்படுத்தி, தனிப்பட்ட வாழ்க்கைக்கும் வேலைக்கும் இடையே ஆரோக்கியமான சமநிலையை உருவாக்க உதவுகிறது.

**உயர்தரமான பணி வாழ்க்கையின் முக்கியக் கூறுகள் பின்வருமாறு:**

***பணி-வாழ்க்கைச் சமநிலை:*** நெகிழ்வான வேலை நேரங்கள், தொலைதூரப் பணி வாய்ப்புகள் மற்றும் பணிச்சுமையை நிர்வகித்தல் ஆகியவற்றை அனுமதித்தல்.

***பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்:*** பாதுகாப்பான, தூய்மையான மற்றும் அபாயமற்ற சூழலை வழங்குதல்.

**பணிப் பாதுகாப்பு:** எதிர்கால வேலைவாய்ப்பு குறித்த கவலையைக் குறைத்தல்.

**பணி வளர்ச்சி:** கற்றல், மேம்பாடு மற்றும் பணி முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை வழங்குதல்.

**QWL (வேலை வாழ்க்கை தரம்) என்பதன் கூறுகள்:**

வேலை இட உறவுகள், சமூகச் சூழல்

- பணியிடத்தில் நல்ல உறவுகள், நல்ல வேலைச்சூழல்

வேலை உள்ளடக்கம்

- செய்யும் வேலை ஆர்வமூட்டும் வகையில் இருக்க வேண்டும்

வேலை இடத்தில் ஆரோக்கியம்

- உடல் மற்றும் மன ஆரோக்கிய பாதுகாப்பு

திறன்கள், தொழில் வளர்ச்சி பாதைகள்

- திறமைகளை மேம்படுத்தும் வாய்ப்புகள் மற்றும் பதவி உயர்வு

அனைவருக்கும் சம தொழில் வாய்ப்பு

- பாலினம், மதம், இன வேறுபாடு இல்லாமல் சம உரிமை

பங்கேற்பு மேலாண்மை, அர்ப்பணிப்பு

- ஊழியர்கள் முடிவெடுப்பில் பங்கேற்பதும், நிறுவனத்துக்கு பற்றும் தீர்மானம் (Conclusion)

* பணியாளர்கள் ஈடுபாடு என்பதையே பணிவாழ்வுத் தரம் (Quality of Work Life) முக்கியமாகக் கருதுகிறது. இது பணியாளர்களை முடிவெடுப்பில் பங்கேற்க ஊக்குவிக்கும் முறைகளை உள்ளடக்கியது. இதன் மூலம் நல்ல உறவுகள் உருவாக உதவுகிறது.

* திறமையான பணியாளர்களைத் தக்கவைக்க, நிறுவனத்தில் குறைந்த மனஅழுத்த நிலையும், உயர்ந்த பணிவாழ்வுத் தரமும் இருக்க வேண்டும்.

